
பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 20 வியாழக்கிழமை 06.11.2025 | அதிர்வு 100

## சுற்றுலாப் பயணி சடலமாக மீட்பு!



கண்டிப் பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை விடுதி ஒன்றில் இருந்து வெளிநாட்டு பெண்

03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# நெடுந்தீவு தவிசாளர் உள்ளிட்ட அறுவர் கைது!

## தொல்பொருள் சின்னத்துக்குச் சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில்

(எஸ்.நிதர்ஷன்)

நெடுந்தீவில் தொல்பொருள் சின்னத்துக்குச் சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

03▶






### மீண்டும் கூட்டமைப்பாகச் செயற்பட

# நிபந்தனை விதிப்பது நல்லதல்ல!

### சுமந்திரனுக்குச் சுரேஷ் பதில்

(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் மீண்டும் கூட்டமைப்பாக ஒன்றிணைந்து செயற்படுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

03▶

# 2026 ‘பட்ஜட்’ தயார் நாளை முன்வைப்பு

2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளின் இறுதி வரைவைப் பரிசீலிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று இரவு ஜனாதிபதி செயலகத்தில் இணைந்து கொண்டார்.

நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

தற்போதைய அரசின் இரண்டாவது வரவு – செலவுத் திட்டம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார

அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நாளை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# இலங்கையின் சுகாதாரத்துறைக்கு இந்தியாவிடம் உதவி கோரிய சஜித்







இலங்கை மருத்துவத் துறையில் நிலவும் அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறைக்குத் தீர்வு காண இந்திய அரசின் ஆதரவை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டாவைச் சந்தித்து கோரிக்கை விடுத்தார்.

இது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் இன்னுமொரு நடவடிக்கையாகும் என்று எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய சுகாதார கட்டமைப்பினூடாக பல தசாப்த காலமாக இலவச சுகாதார வசதிகள் வழங்கப்பட்டபோதிலும், தற்போது அத்தியாவசிய மற்றும் உயிர் காக்கும் பல மருந்துகளின் பற்றாக்குறை, அவற்றைப் பயன்படுத்தும் இலட்சக்கணக்கான மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது என்று சஜித் பிரேமதாஸ என்று சுட்டிக்காட்டினார்.

ஒரு சில மருந்துகள் தனியார் துறையினூடாக மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியுமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அரச மருத்துவமனைகள் எதிர்கொள்ளும் அந்தச் சவாலை வெற்றி கொள்வதற்காக இலங்கைக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குமாறும், இந்தியா வழங்கும் அந்த ஒத்துழைப்பை மரியாதையுடன் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையின் சுகாதாரத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசு கடந்த காலத்தில் வழங்கிய பங்களிப்பையிட்டும் சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்தார்.

குறிப்பாக, 2016 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் ஆரம்பிக்கப்பட்ட '1990 – சுவ செரிய' அம்புலன்ஸ் சேவையை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், அந்தச் சேவையை அறிமுகம் செய்ததினூடாக நாடு முழுவதும் அவசர மருத்துவ பதிலளிப்பு கட்டமைப்பு வலுவடைந்ததாகவும்,அது "உயிர் காக்கும் கூட்டாண்மை" என விவரிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துவது, ஔடத ஒத்துழைப்பை விரிவுப்படுத்துவது மற்றும் அனைவருக்கும் அத்தியாவசிய மருந்துகள் பற்றாக்குறையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்கு ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியம் மற்றும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் இந்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டா ஆகியோர் விரிவாகக் கலந்துரையாடினர்.



# இறம்பொடையில் இன்று குளவி கொட்டி 7 தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

நுவரெலியா, இறம்பொடை, வெதமுல்லை தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் எழுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் 11 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஆண் தொழிலாளர்கள் ஐவரும், பெண் தொழிலாளர்கள் இருவருமே குளவிக்கொட்டுக்கு இலக்காகிய நிலையில் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நெடுந்தீவு...

நெடுந்தீவு வெடியரசன் கோட்டை அமைந்துள்ள பகுதியில் வீதி

அமைப்புப் பணி முன்னெடுக்கப்பட்டது. அந்தப் பகுதியில் உள்ள தொல்பொருள் சின்னம் சேதப்படுத்தப்பட்டது எனது தெரிவித்து தொல்லியல் திணைக்களத்தால் செய்யப்பட்ட முறைப்பாடுக்கமைய, அந்தப் பணியில் ஈடுபட்ட இரண்டு பேர் நெடுந்தீவு பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டு இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்ததாரர் உள்ளிட்ட நான்கு பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு இன்று கைது செய்யப்பட்டனர்.

கைதான நான்கு பேரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டை தமிழ் மன்னனின் வரலாற்றுடன் தொடர்புடையது எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், சில வருடங்களுக்கு முன்பு அந்தப் பகுதி பௌத்த வரலாற்றுடன் தொடர்புடையது எனக் கடற்படையினரால் பதாகை போடப்பட்டு சர்ச்சை எழுந்த நிலையில் அந்தப் பதாகை நீக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியிலே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

### சுற்றுலாப் பயணி...

சுற்றுலாப் பயணி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கண்டி அருப்பொல, தர்மசோக்கா மாவத்தையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இறந்து கிடந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் சுற்றுலா விசாவின் மூலம் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவைச் சேர்ந்த கெய்ட்லின் ஜூலி கிளார்க் (வயது 55) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் மூன்று மாதங்களாக வாடகை வீட்டில் தங்கி வருகின்றார். இவர் கடந்த 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிகிரியாவுக்குச் சுற்றுலா சென்று வீடு திரும்பியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்காக கண்டி தேசிய வைத்தியசாலையின் பிணவறைக்குச் சடலம் அனுப்பப்பட்டுள்ளது.

கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

### நிபந்தனை...

இதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால், சில நிபந்தனைகளை அவர் கூறியுள்ளார். அவை என்ன நிபந்தனைகள் என இதுவரை எமக்குத் தெரியாது. பேச்சுவார்த்தை ஊடாக இணைய முடியும். பேசுவதற்கு முன்னர் நிபந்தனைகளை முன்வைப்பது பொருத்தம் இல்லை."

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண ஆட்சி முறைகளை விடுத்து அரசு ஆளுநர் ஆட்சியை நடத்துவதை நிறுத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும் எனக் கூறி வருகின்றது. இதனடிப்படையில் பார்க்கும் போது அடுத்த வருடமும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நிலைப்பாட்டில் அரசு இல்லை எனத் தெரிகின்றது.

எல்லை நிர்ணய வேலைகளை விரைவில் மேற்கொண்டு மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்த வேண்டும்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைத்துப்பாக்கிகளைக் கோரியிருக்கின்றனர். பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அவர்கள் கைத்துப்பாக்கிகளைக் கோரியிருக்கலாம்.

கடந்த அரசுகள் அனைத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியிருந்தது. ஆனால், இந்த அரசு பாதுகாப்பு வழங்காத நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கலாம். அரசு முதலில் பாதாள உலகக் குழுக்களை ஒழிக்க வேண்டும்." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# திருப்பு முனை வருமா?

மோசமான பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து, மீண்டெழ முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் இலங்கை வரும் 2028 இலிருந்து, இதுவரை தான் செலுத்தாமல் தவறி வரும் வெளிநாட்டுக் கடன் கடப்பாடுகளை மீண்டும் எப்பாடு பட்டேனும் செலுத்தத் தொடங்க வேண்டும் என்ற பெரும் இக்கட்டில் சிக்கி இருக்கின்றது.

கடன் தவணைக் கொடுப்பனவுகளின் மீள் செலுத்துகைக்குத் தேவையான அந்நிய செலாவணியை சேமிக்கும் நிலையை இலங்கை இன்னும் சரிவரப் பேணவேயில்லை. மாறாக, வெளிநாட்டு இறக்குமதிகளுக்காகத் தன்னுடைய அந்நிய செலாவணி கையிருப்பை கண்மூடித்தனமாகக் கரைக்கும் மோசமான நிலையில்தான் நாடு உள்ளது.

இந்தப் பின்புலத்தில் உள்நாட்டில் தான் உற்பத்தி செய்து கொள்ளக் கூடிய பல்வேறு தயாரிப்புகளை வெளிநாட்டிலிருந்து கண்மூடித்தனமாக இறக்குமதி செய்து, இருக்கும் அந்நிய செலாவணி கையிருப்பையும் நாடு கரைத்துக் கொண்டிருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

2007 முதல் காய்கறி, மரக்கறி வகைகளின் இறக்குமதிக்காக மட்டும் ஒரு டிரில்லியன் (பத்து லட்சம் கோடி) ரூபாவுக்கும் அதிகமாக நாடு செலவிட்டுள்ளது.

2007 முதல் சீனி மற்றும் இனிப்புப் பொருள்களுக்காக மட்டும் 92 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ஒட்டு மொத்த நுகர்வோர் பொருள்களின் இறக்குமதிக்கு மட்டும் ஒரு டிரில்லியன் (பத்து லட்சம் கோடி) ரூபாவுக்கும் அதிகமாக நாடு செலவிட்டுள்ளது. இது 2011 இல் வெறும் நாற்பதாயிரம் கோடி ரூபாக மட்டுமே இருந்தது.

இந்தப் புள்ளி விவரங்கள் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டுப் பொருள்களில் தங்கியிருக்கும் போக்கு நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வருவதையே காட்டுகிறது.

இறக்குமதிப் பொருளாதாரத்தில் இருந்து விலகி, ஏற்றுமதிப் பொருளாதாரம் நோக்கி நாடு நகர்ந்தால் மட்டுமே இப்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாடு மீண்டெழ முடியும்.

நாட்டின் பொருளாதார செல்நெறியைத் தீர்மானிக்கும் வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா நாளை தாம் சமர்ப்பிக்கவிருக்கின்றார். அந்த வரவு - செலவுத் திட்டத்தில் நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதி நோக்கி திருப்புவதற்காக என்ன யோசனைத் திட்டங்களைஅவர்உள்ளடக்கப் போகின்றார் என்பதை நாடு பார்த்திருக்கின்றது.

# அரசின் போதை ஒழிப்பு, லஞ்ச ஊழல் ஒழிப்புகள் நாட்டின் எதிர்காலத்துக்கு நம்பிக்கையளிக்கின்றன

## ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி பாராட்டுகிறது

(நூருல் ஹுதா உமர்)

உலகின் அழகிய நாடுகளில் ஒன்றான சகல வளமும் மிக்க எமது தேசம் அபிவிருத்தியடையாமல் இருந்த காரணங்களில் லஞ்சம், ஊழலும், போதைப் பொருள் பாவனையும் அதீத செல்வாக்கு செலுத்தின.

இலங்கையில் போதைப்பொருள் பரவல், சமூகத்தின் அடித்தளங்களை அசைத்துக் கொண்டிருக்கும் மிகப் பெரிய சமூக ஆபத்தாக மாறியுள்ள இந்தக் காலகட்டத்தில், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசு உறுதியான மற்றும் துணிவான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

நாட்டின் எதிர்காலத் தலைமுறையைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இந்தப் போதையொழிப்பு தேசியப் போராட்டம் மக்களின் வாழ்வில் நம்பிக்கையையும் நெறிமுறையையும் மீண்டும் நிலைநாட்டும் முயற்சியாக ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி பாராட்டுகிறது.

இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி அன்வர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்சியின் தலைமையகத்தில் இன்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அவர் மேற்கண்டவாறு



தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

நாடு முழுவதும் சட்டம் அமல்படுத்தும் பாதுகாப்பு படையின் அதிகாரிகள், சமூக அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் போதைப்பொருள் வலையமைப்புகளை முறியடிக்கும் நடவடிக்கைகள் நாட்டில் பலனளித்து வருகின்றன. குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்குள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கல்வி வழி நடவடிக்கைகள் மகிழ்ச்சிகரமான முன்னேற்றமாகும்.

லஞ்சம் மற்றும் ஊழலை முறியடிக்க அரசு எடுத்துள்ள கடுமையான சட்ட நடவடிக்கைகள் நாட்டின் நிர்வாக நெறிமுறைகளையும் பொது நம்பிக்கையையும் மீட்டெடுக்கும் முக்கியமான கட்டமாக அமைகிறது. லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கும் நீதித்துறைக்கும் கொடுக்கப்பட்ட சுதந்திரம் மற்றும் அதிகார விரிவாக்கம் மற்றும் வெளிப்படையான விசாரணை நடைமுறைகள், மக்கள் மத்தியில் நீதி மீதான நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளன.

ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி, அரசின் இந்த முயற்சிகளை முழுமையாக ஆதரிக்கின்றது. நாட்டின் முன்னேற்றத்துக்கும் சமூக ஒற்றுமைக்கும் அடிப்படை அம்சமான நேர்மை, ஒழுக்கம், சட்டத்தின் மேலாதிக்கம் ஆகியவற்றை நிலைநாட்டுவது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும் எனக் கட்சி வலியுறுத்துகிறது. அதேவேளை, போதை ஒழிப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் தற்காலிக பிரச்சாரமாக அல்லாமல், நீடித்த கொள்கை மற்றும் கல்வி அடிப்படையிலான தேசிய இயக்கமாக தொடர வேண்டும் என்பதையும் கட்சி வலியுறுத்துகிறது.

ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி மக்கள் நலனுக்காக வெளிப்படையான ஆட்சியையும் ஒழுக்க நெறி கொண்ட அரசியலையும் முன்னெடுக்கும் எந்த அரசாங்க முயற்சிக்கும் எப்போதும் தனது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும்.- என்றார்






# அரச பஸ் சேவை இல்லாமையால் பாடசாலை மாணவர்கள் அவதியில்!

**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா மறே, சாமி மலை, கொழும்பு ஆகிய பிரதான அரச பஸ் சேவைகள் கடந்த சில நாள்களாகச் சேவையில் இல்லாமையால் மாணவர்கள் பெரும் அவதியடைந்து வருகின்றனர்.

நாளாந்தம் அதிகாலை வேளையில் ஹட்டன் நகரில் இருந்து அஞ்சல் பொதிகள் மற்றும் அரச தனியார் ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயணிகளை ஏற்றிக் கொண்டு முதல் சேவையாக டிக்கோயா கிளங்கன் நோர்வூட் மஸ்கெலியா சாமிமலை சென்று மீண்டும் சாமி மலையில் இருந்து தலைநகர் கொழுப்பு நோக்கி செல்லும் மஸ்கெலியா மறே பஸ் சேவை கடந்த பல நாள்களாக சேவையில் இல்லை.

இந்த சேவை நாளாந்தம் மறே மஸ்கெலியா, மறே ஹட்டன் மற்றும் மேலதிக ஐந்து சேவைகள் தற்போது இடம்பெறுவதில்லை.

இதன் காரணமாக இந்தப் பகுதிக்கு செல்லும் அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக முன் கூட்டியே பணம் செலுத்தி பெற்று கொண்ட பருவகாலச் சீட்டை வைத்துக் கொண்டு தனியார் பஸ்களில் பணம் செலுத்தி பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என முறைப்பாடு தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட ஹட்டன் அரச பஸ் நிலைய அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி நிறுத்தப்பட்ட சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

# வட்டுக்கோட்டையில் சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம்!





**(பூ.லின்ரன்)**

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம் நேற்று (05) வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் சிவில் பாதுகாப்பு குழுவானது கடந்த 5 வருடங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அது செயற்பாடற்று காணப்படுகின்றது. அந்தவகையில் அதனை மீண்டும் இயங்கவைக்கும் நோக்கில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

ஒவ்வொரு செயற்றிட்டம் ஆரம்பிக்கும்போதும் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் கூட்டங்களை மட்டும் நடத்துவதோடு நின்றுவிடாமல், மக்கள் கூறும் பிரச்சினைகள் பொலிஸார் தட்டிக் கழிக்காமல் முழுமையாக கிரகித்து அதற்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்ற கோரிக்கையை சிவில் பாதுகாப்பு குழுவினர் இதன்போது முன்வைத்தனர்.

ஊர்காவற்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களில் உள்ளவர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.






# சட்டவிரோதமாக மதுபானத்தை விற்ற சந்தேக நபர் கைதானார்!

**(பாறுக் ஷிஹான்)**

போயா விடுமுறை தினத்தில் சட்ட விரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை (5) அம்பாறை மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சோதனை நடவடிக்கையைப் பொத்துவில் அறுகம்பே சுற்றுலாப் பகுதியில் மேற் கொண்டிருந்தனர்.

இதன்போது போயா தினத்தில் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள் ளார்.

சந்தேக நபர் மீட்கப்பட்ட மதுபான வகைகளுடன் நீதிமன்ற நடவடிக்கை களுக்காக பொத்துவில் பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை அறுகம்பே சுற்று லாப் பகுதியில் உள்ள ஒரு ஹோட்ட லில் வைத்து கைது செய்த பொலிஸார் ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ள மதுபான வகைகளைப் பறிமுதல் செய்துள்ள னர்.

கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப் பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரில் அம்பாறை பிரிவுக்குப் பொறுப்பான பதில் பொலிஸ் அத்தியட்ச-கர் பிரதீப் குமாரவின் வழிகாட்டுதலின் அம்பாறை மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பிரியங்கர தலைமையிலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளம் ஹாமில்டன் கால்வாய் மேம்படுத்தல் வேலைத் திட்டம்




**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம் ஹாமில்டன் கால்வாயை மேம்பாடு செய்தல் மற்றும் உலக நகர தினத்தைக் கொண்டாடும் நிகழ்வு அண்மையில் வென்னப்புவ பிரதேச சபையில் நடைபெற்றது.

400 ஆண்டுகள் பழமையான ஹாமில்டன் கால்வாய், கொழும்புக் கும் புத்தளத்துக்கும் இடையில் படகு களைப் பயன்படுத்தி பொருள்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்ட தாகக் கூறப்படுகிறது.

எனினும் அதன் பயன்பாடு இல்லாத தால், ஹாமில்டன் கால்வாய் மோச மடையத் தொடங்கியது.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த போது,

நிர்வாக அமைச்சர் டாக்டர் சந்தன அபேரத்ன, ஹாமில்டன் கால்வாயை நாட்டின் சுற்றுலாத் துறைக்கு பயன்படுத் தலாம் எனவும் இந்தத் திட்டத்துடன் இணைந்து, ஹாமில்டன் கால்வாயை சுத்தம் செய்து இருபுறமும் தேனீ செடிகள் நடவும் திட்டமிடப்பட்டது.

சுற்றுச்சூழல் பிரதி அமைச்சர் அன் டன் ஜெயக்கொடி, வென்னப்புவ பிரதேச சபையின் தலைவர் அன்டன் குமார, புத்தளம் மாவட்ட செயலாளர் இந்திக மஞ்சுள சில்வா ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

ஹாமில்டன் கால்வாயின் இரு புறமும் நடுகை செய்வதற்காக தேனீ செடிகள் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# சாய்ந்தமருதில் புதிய பாலம் அமைக்க முன்னோடிக் கூட்டம்

**(பாறுக் ஷிஹான், எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கரைவாகுப்பற்று கிழக்குக் கண்டம் மற்றும் தீவு வட்டை மேற்குக் கண்டம் என்பவற்றை ஊடறுக்கும் கிடாமூலை பள்ளாற்றிற்கான புதிய பாலம் அமைக்கும் ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை (05) சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்திலுள்ள கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்து நலனில் பாரிய நன்மை பயக்கும் இந்தத் திட்டம் பற்றிய முக்கியமான இந்த நிகழ்வில், திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்திக் குழு தலைவரும் அரசியலமைப்புப் பேரவை உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது மருதூர் கலைமன்ற பொல்லடி குழுவினரால் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டு அதிதிகள் வரவேற்கப்பட்ட இந்த நிகழ்வில், துறைசார் அதிதிகள் மற்றும் மேற்படி கண்டங்களின் வட்டவிதானைமார்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்புடன் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

அல் அமான் சமூக நலன்புரி அமைப்பின் பொதுச் செயலாளர் எம்.பி.ஏ. ஜப்பார் ஏற்பாட்டில், பொருளாளர் அப்துல் ரஹீம் நெறிப்படுத்தலில், ஓய்வுபெற்ற அதிபர் ஐ.எல்.ஏ. மஜீத் தலைமையில், இடம்பெற்ற இந்த நிகழ்வில், சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் எம்.எஸ்.எம்.முபாரக், பொதுச் செயலாளர் எஸார் மீராசாஹிப், சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பிரதித் தலைவரும் ஜம்இய்யத்துல் உலமா சாய்ந்தமருது – மாளிகைக்காடு கிளையின் தலைவருமான எம்.எம்.எம். சலீம் (ஷர்க்கி), நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் எஸ். இம்தியாஸ், மூத்த கல்விமான் சட்டத்தரணி எம்.சி. ஆதம்பாவா உட்பட தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.










# புத்தளம் சென் ஆண்ட்ரூஸ் மத்தியின் 140ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

புத்தளம் சென் ஆண்ட்ரூஸ் மத்திய கல்லூரியின் 140ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட நிகழ்வு அதிபர் தலைமையில் செவ்வாய்க்கிழமை (04) இடம் பெற்றது

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண்டு நிறைவு விழாவில், ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் விஷேடமாக தயாரிக்கப்பட்ட பெரிய கேக் வெட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்ற பிரமாண்டமான அணிவகுப்பு நடைபவனி ன புத்தளம் நகர் முழுவதும் வீதி உலா வந்ததும் சிறப்பம்சமாகும்.

கல்லூரியின் 140ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல கல்விசார் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# உடுத்துறை துயிலுமில்லத்துக்கு ஏற்பாட்டு குழு!

**(பூ.லின்ரன்)**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, உடுத்துறை மவீரர் தியிலும் இல்லத் துக்கான நினைவேந்தல் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள மாவீரர்க ளின் பெற்றோர்கள், உறவினர்கள், இணைந்தே குறித்த நினைவேந்தல் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னதாக மாவீரர்கள் நினை விடத்துக்கு மாவீரர் செஞ்சேரனின் தந்தை சுடர் ஏற்றிவைத்ததை தொடர்ந்து மலரஞ்சலியை மாவீரர் இன்னிசையின் தந்தை ஆரம்பித்துவைத்தார்.

இந்தநிகழ்வில் வடமராட்சி கிழக்கி லுள்ள மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் பலரும் கலந்துகொண் டனர்.



# கிழக்கு வீடமைப்பு அதிகார சபையின் திட்ட முன்னேற்ற ஆலோசனைக் கூட்டம்

**(ஹஸ்பர்)**

கிழக்கு மாகாண வீடமைப்பு அதி கார சபையின் 2025 திட்டங்களைப் பற்றிய முன்னேற்ற ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் கிழக்கு மாகாண ஆளுனர் ஜயந்த லால் ரத்ன சேகரவின் தலைமையில் திருகோண மலையில் உள்ள ஆளுனர் அலு வலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண வீடமைப்பு அதி கார சபையின் 2025 திட்டங்கள் அடிப் படையில், மாகாணத்தில் நடைபெறும் திட்டங்களின் முன்னேற்றத்தைப் பற்றிய ஆலோசனை கூட்டமாக இது இடம்பெற்றது.



இதன்போது, 2024 ஆம் ஆண்டுக் கான 28 மில்லியன் ரூபாவுக்கும், 2025 ஆம் ஆண்டுக்கான 145 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகைகள், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபைக்காக ஒதுக்கப்பட்டமை தொடர்பி லும் கலந்துரையாடப்பட்டது.



# தலவாக்கலை தமிழ் மகா வித்தியில் புதிய கேட்போர் கூடத்துக்கு அடிக்கல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிய கேட்போர் கூடம் அமைப்பதற்கான அடிக்கல் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

மேல் கொத்மலை நீர் மின் திட்டத்தின் கீழ் வழங்கப்படவிருந்த புதிய கேட்போர் கூடமானது மேல் கொத்மலை நீர் மின் திட்டத்தால் அந்தக் காலப் பகுதியில் மறுக்கப்பட்ட நிலையில் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் பாலமுரளி தலைமையில் அதன் உறுப்பினர்கள் பிரதி அதிபர் எம். ஐ.எம். பாரிஸ், விஜயகுமார், அன்பழகன், பாடசாலையின் அதிபர் கிருஸ்ணசாமி ஆகியோரால் 2014 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.


அந்த வழக்கின் பிரகாரம் புதிய கேட்போர் கூட கட்டடத்தை மேல் கொத்மலை நீர் மின் திட்டம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் கடந்த வருடம் உத்தரவிடப்பட்டது.

அதற்கிணங்க இந்தக் கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது. இந்தக் கட்டடம் 270 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் அமைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் ஹட்டன் மாவட்ட நீதிமன்ற நீதிபதியும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவருமான பீட்டர் போல், தமிழ் மகா வித்தியாலய பாடசாலையின் அதிபர் ரோஹிணி, முன்னாள் அதிபர் கிருஸ்ணசாமி, பாடசாலை அபிவிருத்தி சங்க முன்னாள் செயலாளர் பாலமுரளி, பழைய மாணவர் சங்க செயலாளர் சிவசாமி பத்மநாதன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் பிரபாகரன், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர்.










# போரால் சுற்றுச்சூழல் சுரண்டப்படுவதை தடுப்பதற்கான சர்வதேச தினம் இன்று

மனிதகுலம் எப்போதும் போர் உயிரிழப்புகள் விடயத்தை இறந்த மற்றும் காயமடைந்த வீரர்கள், பொது மக்கள், அழிக்கப்பட்ட நகரங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை மட்டும் கணக்கிட்டிருந்தாலும் சுற்றுச் சூழலும் பெரும்பாலும் போரின் விளம்பரப்படுத்தப்படாத பலியாகவே இருந்து வருகிறது.



**பானுஷா நிமல்,**
**ஊடகத்துறை மாணவி,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

குண்டுகள் வெடிக்கும் போது நிலம் அழிக்கப்படுகிறது, நதிகள் மாசுபடுகின்றன, காடுகள் எரிக்கப்படுகின்றன, விலங்குகள் அழிந்து செல்கின்றன.

கடந்த 60 ஆண்டுகளில் அனைத்து உள்நாட்டு மோதல்களிலும் குறைந்தது 40 சதவிகிதம் இயற்கை வளங்கள் சுரண்டப்படுகின்றன என்று உணர்ந்த ஐக்கிய நாடுகள் சபை, 2001 ஆம் ஆண்டு முதல் நவம்பர் 6 ஆம் திகதியை ‘போர் மற்றும் ஆயுத மோதல்களில் சூழலியல் சுரண்டலைத் தடுப்பதற்கான சர்வதேச நாள்’ என அறிவித்தது. மே 27, 2016 அன்று ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் சபை இத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது

நீர் மாசுபாடு, கருகிய பயிர்கள், விஷம் கலந்த மண், இறந்த விலங்குகள், காடுகளை அழித்தல் போன்ற பல வகையில் சுற்றுச்சூழல் பாதிப்படைகிறது.

வைரங்கள், தங்கம் மற்றும் எண்ணெய் போன்ற அதிக மதிப்புள்ள வளங்களாக இருந்தாலும் சரி வளமான நிலம் மற்றும் நீர் போன்ற பற்றாக்குறையான வளங்களாக இருந்தாலும் சரி இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் போரின் போது ஏற்பட்ட அழிவின் இருமடங்கை உலக நாடுகள் சந்திக்க நேரிடும்.

வாழ்வாதாரங்களையும் சுற்றுச்சூழல் அமைப்புகளையும் நிலைநிறுத்தும் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டால் நீடித்த அமைதி தொடர்ந்தும் இருக்க முடியாது என்பதால் மோதல் தடுப்பு, அமைதி காத்தல் மற்றும் அமைதி கட்டமைக்கும் உத்திகளின் ஒரு பகுதியாக சுற்றுச்சூழல் மீதான நடவடிக்கை இருப்பதை உறுதி செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

**இந்த நாளின் முக்கிய நோக்கம்:-**

* போரின்போது சுற்றுச்சூழலை வளங்களைச் சுரண்டுவதைத் தடுக்க உலகத்தின் கவனத்தை ஈர்ப்பது.

* இயற்கை வளங்களை (நீர், காடு, நிலம், காற்று) பாதுகாக்கும் அவசியத்தை நினைவூட்டுவது.

* போரின் விளைவால் பாதிக்கப்பட்ட சூழலை மீண்டும் பசுமைப்படுத்தும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பது.

* சமாதானத்துடன் சுற்றுச்சூழலையும் இணைத்துக் கருதுவது.

– போன்றவற்றை உள்ளடக்கி உள்ளது .

இத் தடுப்பு நடவடிக்கைக்கான ஐ.நா. கட்டமைப்புக் குழுவால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆறு ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் மற்றும் துறைகள் (UNEP,UNDP, UNHABITAT, PBSO, DPA மற்றும் DESA) மோதல் தடுப்பு மற்றும் அமைதி கட்டமைக்கும் திட்டங்களின் ஒரு பகுதியாக இயற்கை வளங்கள் மீதான அழிப்புக்களை அடையாளம் காணவும், தடுக்கவும் மற்றும் மாற்றவும் நாடுகளுக்கு உதவ ஐரோப்பிய ஒன்றியத்துடன் கூட்டு சேர்ந்துள்ளன.

மோதலுக்குப் பிந்தைய அமைதியைக் கட்டமைத்தல் மற்றும் இயற்கை வளங்கள் குறித்த உலகளாவிய ஆராய்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டது.


மேலும் அதில், சுற்றுச்சூழல் சட்ட நிறுவனம் (ELI), ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP), மற்றும் டோக்கியோ மற்றும் மெக்கில் பல்கலைக்கழகங்கள் ஆகியவை மோதலுக்குப் பிந்தைய அமைதியைக் கட்டமைக்கும் போது இயற்கை வளங்களை நிர்வகிப்பது குறித்துக் கற்றுக்கொண்ட பாடங்களையும் நல்ல நடைமுறைகளையும் சேகரிக்க ஓர் உலகளாவிய ஆராய்ச்சித் திட்டத்தைத் தொடங்கின. இந்த நான்கு ஆண்டு ஆராய்ச்சித் திட்டம் 55 நாடுகளைச் சேர்ந்த 230க்கும் மேற்பட்ட அறிஞர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் முடிவெடுப்பவர்களால் 150க்கும் மேற்பட்ட சக மதிப்பாய்வு செய்யப்பட்ட விடய ஆய்வுகளை வழங்கியுள்ளது. மோதலுக்குப் பிந்தைய அமைதிக்

தொடர்ச்சி▼





# போரால் சுற்றுச்சூழல் சுரண்டப்படுவதை தடுப்பதற்கான சர்வதேச தினம் இன்று




தொடர்ச்சி▲

கட்டமைப்பை ஆதரிப்பதற்காக இயற்கை வளங்களை நிர்வகிப்பதில் அனுபவங்கள், பகுப்பாய்வுகளின் மிக முக்கியமான தொகுப்பை இது பிரதிபலிக்கிறது.

**போரினால் இயற்கைக்கு ஏற்படும் அபாயம்**

போர் என்பது ஒரு மோசமான விளைவை ஏற்படுத்தக் கூடியது. எரியும் எண்ணெய் கிணறுகளிலிருந்து வரும் புகை மூட்டங்கள், சூறையாடப்பட்ட தொழில்துறை வசதிகள், கைவிடப்பட்ட வெடிமருந்துகள் மற்றும் இடிந்து விழுந்த கட்டடங்கள் ஆகியவை மோதலின் அடையாளங்களில் அடங்கும்.

சண்டையினாலோ அல்லது அரசாங்கக் கட்டுப்பாட்டில் ஏற்பட்ட முறிவாலோ எதனால் என்றாலும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதம் மக்களின் ஆரோக்கியத்திற்கும் நல்வாழ்விற்கும் பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்துகிறது. இது ஒரு புதிய பிரச்சினை அல்ல. மாறாக பல தசாப்தங்களாக நீடிக்கும் ஒன்றாகும். இதற்கு உதாரணமாக, ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி போன்ற நகரங்களில் போரின் போது ஏற்பட்ட அணுகுண்டுத் தாக்கம் தற்போது வரை உள்ளமை இருக்கின்றது. அங்கு பிறக்கும் குழந்தைகள் விசேட தேவை உடையவர்களாகக் காணப்படும் வகையில் போர் முடிவுற்று பல ஆண்டுகளின் பின்னரும் அதன் தாக்கம் காணப்படுகிறது. முதலாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட வெடிமருந்துகளிலிருந்து கனரக உலோக மாசுபாட்டால் ஐரோப்பாவின் பகுதிகள் இன்னும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு மோதலில் இருந்து தப்பித்து அதன் பின்னர் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப மக்களுக்கு ஆரோக்கியமான சூழல் தேவை. இது உணவு, தங்குமிடம் மற்றும் வேலை போன்றவற்றை மேற்கொள்ள வழிவகுக்கிறது.

உதாரணமாக –

ஆப்கானிஸ்தான், கொலம்பியா, ஈராக் போன்ற மோதல் மண்டலங்களில் நடந்த போர்களை எடுத்துக் கொண்டால் அவை இயற்கை வளங்களின் பெரும் தேய்மானத்திற்கு வழிவகுத்தன. ஆப்கானிஸ்தானில் சில பகுதிகளில் காடழிப்பானது 95 வீதஅதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தற்போது நடைபெற்ற காசா – இஸ்ரேல் போரிலும் பல பகுதிகள் குண்டுவீச்சினால் பாரியளவில் பாதிப்படைந்துள்ளன.

இலங்கையில் இடம் பெற்ற 30 ஆண்டு உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, கைவிடப்பட்ட இயற்கை வளங்களோ ஏராளம்.

இதனை விட சில சமயங்களில் மோதல் ஏற்பட இயற்கை வளங்களும் காரணமாக உள்ளன. வைரங்கள், மரம் மற்றும் கரி முதல் தந்தம் மற்றும் மீன்வளம் போன்ற வனவிலங்குகள் வரை சுரண்டப்பட்ட வளங்கள் எதுவாக இருந்தாலும் இருக்கலாம்.

தொடர்ச்சி▼

# போரால் சுற்றுச்சூழல் சுரண்டப்படுவதை தடுப்பதற்கான சர்வதேச தினம் இன்று

தொடர்ச்சி▲

மோதலை நிலைநிறுத்துவதில் சுரண்டல் முக்கிய பங்கு வகித்ததற்கு பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. உதாரணமாக, கொங்கோ ஜனநாயகக் குடியரசில் சட்டவிரோத சுரண்டல் ஆண்டுதோறும் 1.25 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும் அந்தத் தொகையில் 10-30 சதவீதம் குற்றவியல் குழுக்களுக்கு நிதியளிக்கப் பயன்படுகிறது. மற்றொரு உதாரணம், செனகலில் உள்ள காசாமன்ஸ் மோதல். அங்கு ஆயுதக் குழுக்கள் தங்கள் நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க மரங்களை வெட்டுவதை ஒரு வழியாகப் பயன்படுத்தின.

இவ்வாறாக இயற்கை வளங்களானது போரின்போது அழிவடைவதாகவும் , சுரண்டலுக்கு முகம் கொடுக்கும் வகையிலும் காணப்படுகின்றன. அதற்காகவே இந் நாள் சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த நாளை நாம் எவ்வாறு கடைப்பிடிப்போம்? உலகெங்கிலும் உள்ள அரசு அதிகாரிகள், விஞ்ஞானிகள் மற்றும் கல்வியாளர்கள் இந்த நாளைக் கடைப்பிடிக்கின்றனர். சுற்றுச்சூழலில் போரின் எதிர்மறை விளைவுகளை நன்கு புரிந்துகொள்ள பல்வேறு நிலை குழு விவாதங்களை ஏற்பாடு செய்யலாம். பின்னர் மோதல்களின் வெளிச்சத்தில் பூமியின் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்க தீர்வுகள் முன்மொழிதல் மற்றும் வானொலி பேச்சுக்கள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் வகுப்பறை நடவடிக்கைகள் போர் சுற்றுச்சூழலை எவ்வாறு பாதிக்கிறது என்பதில் கவனம் செலுத்த் வேண்டும்.

இந்த சர்வதேச தினத்தில் ஆயுத மோதல்களின் போது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும், மோதலுக்குப் பிந்தைய மறுகட்டமைப்பின் போது இயற்கை வளங்களின் நல்லாட்சியை மீட்டெடுப்பதன் முக்கியத்துவத்தையும் நாங்கள் வலியுறுத்த வேண்டும்.

உலகளவில் ஆயுத மோதலுக்கு முன்பும், போரின் போதும், போருக்கும் பிறகும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், உலகைக் காப்பாற்றவும் நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்.



# அக்கராயனின் உணவகத்தில் சுகாதாரச் சீர்கேடு உணவக உரிமையாளருக்கு ரூ. 20000 அபராதம்!

(பா.சதீசன்)

கிளிநொச்சி கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட அக்கராயன் பகுதியில் செயற்பட்டு வந்த உணவகம் ஒன்றில் பல்வேறு சுகாதாரக் குறைபாடுகள் கண்டறியப்பட்டதை அடுத்து உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அக்கராயன் பொதுச் சுகாதார பரிசோதகர் இராசலிங்கம் விதுஷன் கடந்த மாதம் (23.10.2025) குறித்த உணவகத்தை பரிசோதனை செய்த போது, பல்வேறு குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டன.

அதன்படி, தனிநபர் சுத்தம் பேணாமலும், ஏப்ரன், தொப்பி, கையுறை அணியாமலும் ஊழியர்கள் உணவை கையாள அனுமதித்தமை, சமைத்த மற்றும் சமைக்காத உணவுகளை தொற்று ஏற்படக்கூடிய வகையில் ஒன்றாக களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை, செல்லுபடியான மருத்துவச் சான்றிதழ் இன்றி உணவு கையாண்டமை, உணவு தயாரிக்கும் மற்றும் பரிமாறும் இடங்களில் இலையான்கள் காணப்பட்டமை உள்ளிட்ட பல குற்றங்கள் பதிவாகியிருந்தன.

இதனையடுத்து அக்கராயன் சுகாதாரப் பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நேற்று முன்தினம் (04) கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது நீதிமன்றம் குறித்த உணவக உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. அத்துடன் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையும் வழங்கப்பட்டது.



# சமூகத்தின் மீதான அக்கறை தற்போது குறைந்து செல்கிறது!

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு






















கட்டுக்கோப்பாக வாழ்ந்த எமது சமூகம் இன்று அவ்வாறில்லாமல் இருக்கின்றது. சமூகத்தின் மீதான அக்கறை என்பதும் குறைந்து செல்கின்றது. ஒரு சிலர் மாத்திரமே எமது சமூகத்தை மீட்டெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் – அக்கறையுடன் செயற்படுகின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்து உறவுகளும் நித்திலம் கலையகமும் இணைந்து நடத்திய கலைஞர் மதிப்பளிப்பு மற்றும் திரையிசை வெளியீடு என்பன முகமாலை சிவபுர வளாகத்தில் நேற்று (05) புதன்கிழமை மூத்த சட்டத்தரணி சோமசுந்தரம் தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்த ஆளுநர், 'மகரந்தம்' திரையிசையையும் வெளியிட்டு வைத்தார். அத்துடன் தூவானம் திரைப்படத்தில் பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் ஈழத் தமிழ் ஒன்றிய கலைஞர்களுக்கும் மதிப்பளித்தார்.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில் மேலும் தெரிவித்ததாவது,

மிக நீண்ட காலத்தின் பின்னர் வித்தியாசமான நிகழ்வொன்றில் நான் பங்கேற்றிருக்கின்றேன். எமது சமூகத்தின் போக்கு தொடர்பில் அதிகம் கவலையடைந்து, அதை மாற்றுவதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற துடிப்புள்ள ஒருவராக மருத்துவர் சிவன்சுதன் எனக்கு நீண்ட காலமாகவே தெரியும்.

எமது சமூகம் எவ்வாறு கட்டுக்கோப்புடன் வாழ்ந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். புறக்காரணிகளால் அது மாற்றியமைக்கப்பட்டுள்ளதா அல்லது எமது சமூகமே அவ்வாறு மாறிவிட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. எப்படி இருந்த நாம் இப்போது எப்படி இருக்கின்றோம்.

சமூகத்தை கலையால் மீட்டெடுக்கும் முயற்சியில் மருத்துவர் சிவன்சுதன் அவர்கள் ஈடுபட்டுள்ளது பாராட்டத்தக்கது. வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழர்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள கலைஞர்களை ஒன்றிணைத்தமை மிகப் பெரிய விடயம். எமது சமூகம் எம்மவர்களின் திறமைகளைப் பாராட்டுவது குறைவதுதான். ஆனாலும், மருத்துவர் சிவன்சுதன் போன்றவர்கள் எங்கள் கலைஞர்களைப் பாராட்டுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி சிறப்பானது.

இப்போது நல்லது செய்வதற்குக் கூடுதலாக எல்லோரும் யோசிக்கின்றார்கள். நல்லது செய்வதில்தான் குறைகண்டு பிடிப்பதற்கு பலர் இருக்கின்றார்கள். ஆனால் தவறான விடயம் தொடர்பில் எவரும் குறைகண்டு பிடிப்பதுமில்லை அதைத் தவறு என்றும் சொல்லுபவர்களும் இல்லை. விமர்சகர்களும் இப்போது மாறிவிட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. எது எப்படியிருப்பினும், எமது சமூகத்தை வழிப்படுத்துவதற்கு கலைஞர்கள் எடுத்துக்கொள்ளும் வகிபாகம் மிகவும் பொறுப்புமிக்கது. அதை அவர்கள் சிறப்பாகச் செய்ய வாழ்த்துகின்றேன். –என்றார்.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சி.ரகுராம் மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி சு.பரமானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.



## உணவால் வண்ணமாகும் சிறகுகள்!

# பிளமிங்கோப் பறவைகளின் வியப்பான வாழ்க்கை...!

கண்களைக் கவரும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ணம். வானின் நீலத்துக்கும் நீரின் வெள்ளித்திரைக்கும் நடுவில் ஒரு இளஞ்சிவப்பு வண்ணக் கோலம் இட்டுச் செல்லும் ஒரு அற்புதப் பறவையினம் தான் பிளமிங்கோ பறவைகள். இதனை பூநாரை அல்லது அதன் சிவந்த கால்களைக் கண்டு செங்கால் நாரை என்றும் அழைக்கப்படுகின்றனர்.

பிளமிங்கோ பறவைகள் பார்ப்பதற்குப் பிரமிப் பூட்டும் தோற்றத்தைக் கொண்டவை. ஒரு ஓவியர் தனது தூரிகையால் வண்ணம் தீட்டியது போன்ற அழகிய வடிவமைப்பு இவற்றுக்கு உண்டு.

பிளமிங்கோக்கள் உயரமான பறவைகள். இவை சுமார் 90 செ.மீ முதல் 150 செ.மீ (3 முதல் 5 அடி) உயரம்வரை வளரக் கூடியவை. இவற்றின் கால்கள் மிக நீண்ட மற்றும் மெல்லியதாக இருக்கும். இந்த நீளமான கால்கள் ஆழம் குறைந்த ஏரிகள் மற்றும் சதுப்பு நிலங்களில் எளிதாக நடக்கவும் உணவு தேடவும் உதவுகின்றன. தரையில் நிற்கும் போது இவற்றின் கணுக்கால் மூட்டு தான் முழங்கால் போன்று வெளிப்படையாகத் தெரியும்.

உண்மையான முழங்கால் உடலுக்கு அருகிலேயே அமைந்துள்ளது. இவற்றின் கழுத்து மிகவும் நீண்டு வளைந்து காணப்படும். இந்தக் கழுத்து நீர் நிலைகளுக்குள் தலைகீழாக அமிழ்த்தி தங்களுக்குத் தேவையான உணவை வடிகட்டி எடுக்க உதவியாக இருக்கிறது. பிளமிங்கோக்களின் அலகு மிகவும் தனித்துவமானது. இது குறுகியதாகவும் அகலமாகவும் கீழ்நோக்கி வளைந்தும் இருக்கும். இதன் அடிப்பகுதி வெள்ளை நிறத்தில் தொடங்கி நுனி கறுப்பில் முடியும். இந்த அலகு வெறுமனே உணவு உண்ணும் கருவி அல்ல இது ஒரு இயற்கையான வடிகட்டி ஆகும்.



**ஜெகன் ஹிமாத்ரி,**
**(ஊடகத்துறை மாணவி,**
**மூன்றாம் வருடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்)**

இவற்றின் அலகின் ஓரங்களில் சீப்பு போன்ற நுண்ணிய இடைவெளிகள் உள்ளன. இவை தலையை நீருக்குள் தலைகீழாக வைத்துக்கொண்டு அலகின் மூலம் சேற்று நீரை உறிஞ்சி அதில் உள்ள சிறிய உயிரினங்கள் பாசிகள் போன்றவற்றை வடிகட்டி விழுங்குகின்றன. இந்த வடிகட்டும் முறை பிளமிங்கோக்களின் உயிர்வாழும் உத்தியில் மிக முக்கியமான ஒன்றாகும். பிளமிங்கோக்களின் மிகவும் வசீகரிக்கும் அம்சம் அவற்றின் இளஞ்சிவப்பு அல்லது பவளச் சிவப்பு நிறமாகும். இந்த நிறம் இயற்கையாகவே அவற்றுக்கு அமைந்ததல்ல.

### உணவே வண்ணத்தை தீர்மானிக்கிறது

இவற்றின் உணவில் உள்ள கரோட்டினாய்டுகள் எனப்படும் இயற்கை நிறமிகள்தான் இவற்றின் வண்ணமயமான சிறகுகளுக்குக் காரணமாகும். பிளமிங்கோக்கள் உண்ணும் கூனிறால் ஒரு வகை

**தொடர்ச்சி▼**

# பிளமிங்கோப் பறவைகளின் வியப்பான வாழ்க்கை...!

**தொடர்ச்சி▲**

கிரத்தேசிய உயிரினம் மற்றும் நீலப்பச்சை பாசிகள் ஆகியவற்றில் இந்த கரோட்டினாய்டுகள் அதிக அளவில் உள்ளன. இந்த நிறமிகள் உடலில் சேரும் போது அவை அவற்றின் சிறகுகளிலும் தோலிலும் கால்களிலும் படிந்து இளஞ்சிவப்பு நிறத்தை அளிக்கின்றன.

புதிதாகப் பிறக்கும் பிளமிங்கோ குஞ்சுகள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருப்பதில்லை. அவை சாம்பல் அல்லது வெண்ணிறத்தில் காணப்படும். கரோட்டினாய்டுகள் நிறைந்த உணவை உண்ணத் தொடங்கிய பின்னரே அவை படிப்படியாக இளஞ்சிவப்பு நிறத்தைப் பெறுகின்றன. இந்த நிறத்தின் அடர்த்தி, அவை உட்கொள்ளும் கரோட்டினாய்டுகளின் அளவைப் பொறுத்து மாறுபடும். அடர்ந்த இளஞ்சிவப்பு நிறம் கொண்ட பறவைகள் ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் கருதப்படுகின்றன.

பிளமிங்கோக்கள் தனிமையில் வாழும் பறவைகள் அல்ல. இவை பெருங்கூட்டங்களாக வாழும் சமூகப் பழக்கம் கொண்டவை. ஆயிரக்கணக்கில் ஏன் சில சமயங்களில் லட்சக்கணக்கான பறவைகள் ஒரே நீர் நிலையை ஆக்கிரமித்து பெரும் இளஞ்சிவப்புப் போர்வையாகக் காட்சியளிக்கும். இது பார்ப்பவர்களின் கண்ணுக்கு ஒரு மகத்தான விருந்தாகும்.

கூட்டமாக வாழ்வது வேட்டையாடுபவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள உதவுகிறது. ஒரு பறவை ஆபத்தைக் கண்டால் அது எழுப்பும் சத்தம் கூட்டத்தில் உள்ள மற்ற பறவைகளை உடனடியாக எச்சரிக்கும்.

பிளமிங்கோக்களின் தனித்துவமான பழக்கங்களில் ஒன்று, அவை ஓய்வெடுக்கும்போது அல்லது தூங்கும்போது ஒரு காலில் நிற்பதுதான். இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. உடல் வெப்பத்தை சேமிக்க அதாவது நீர்நிலைகளில் நிற்கும்போது ஒரு காலை வயிற்றின் இறகுகளுக்குள் மறைத்துக் கொள்வதன் மூலம் அந்த காலில் இருந்து வெளியேறும் உடல் வெப்பத்தைக் குறைக்கின்றன. இது குளிர்ச்சியான சூழலில் உடல் சூட்டைப் பாதுகாக்க உதவுகிறது. அதே போல சோர்வைத் தவிர்ப்பதற்காக ஒரு காலில் நின்றால் சோர்வு ஏற்படாது என்று ஒரு கருத்து உள்ளது. அவை ஒரு காலை ஓய்வு கொடுத்து விட்டு பின்னர் மற்றொரு காலுக்கு மாறும். ஒரு காலில் நிற்பது அவற்றின் தசைகளை எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க உதவுவதாகவும் ஒரு விளக்கம் உள்ளது. இவை சேறு படிந்த கடற்கரை மேடுகளிலும் ஆழம் குறைந்த ஏரிகளின் நடுவிலோ அல்லது மணல் திட்டுகளிலோ கூடுகட்டி இனப்பெருக்கம் செய்கின்றன.

இவற்றின் கூடுகள் ஈரமான களிமண்ணைக் கொண்டு தரையில் இருந்து சுமார் 30 செ.மீ. உயரத்துக்குத் தலைகீழாக வைக்கப்பட்ட கிண்ணம் போன்ற வடிவில் கட்டப்படுகின்றன. சூரிய வெப்பத்தால் உலர்ந்து இவை கெட்டியாகிவிடும்.

பொதுவாக ஒரு பெண் பூநாரை ஆண்டுக்கு ஒரே ஒரு முட்டையை மட்டுமே இடும். ஆண் மற்றும் பெண் இரண்டுமே மாறி மாறி முட்டையை அடை காக்கும். குஞ்சு பொரித்த பிறகு பெற்றோர் இருவரும் தங்கள் குஞ்சுக்கு கொழுப்புகள் மற்றும் புரதங்கள் நிறைந்த பறவைப்பால் போன்ற ஒரு பொருளை சுரந்து உணவளிக்கின்றன.

இவற்றை பயணப் பறவைகள் எனவும் அழைப்பார்கள். வலசை போகும் பிளமிங்கோக்கள் உலகின் பல பகுதிகளிலிருந்தும் மற்றப் பகுதிகளுக்கு நீண்ட தூரம் வலசை (பயணம்) மேற்கொள்ளும் பறவைகளாகும். உணவுப் பற்றாக்குறை இனப்பெருக்கத்துக்கான சிறந்த இடங்களைத் தேடுதல் மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற காரணங்களுக்காக இவை இடம் பெயர்கின்றன. இந்தப் பயணத்தின் போது இவை மணிக்கு 37 மைல்கள் வேகத்தில் பறக்கக் கூடியவை. சில சமயங்களில் 300 மைல்களுக்கும் அதிகமான தூரத்தைக் கடந்து புதிய வாழ்விடத்தை அடைகின்றன.

குளிர்காலங்களில் இங்கு வருகின்றன. இந்தக் காலகட்டத்தில் இந்த நீர்நிலைகள் இளஞ்சிவப்பு நிறத்தில் காட்சியளிப்பது சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

## பிளமிங்கோக்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

இந்தப் பறவைகள் இயற்கையின் ஒரு அற்புதமான படைப்பாக இருந்தாலும் இன்று இவை பல்வேறு சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்கின்றன.

சதுப்பு நிலங்கள் மற்றும் ஆழமற்ற ஏரிகள் மனித நடவடிக்கைகளால் ஆக்கிரமிக்கப்படுவது அல்லது மாசுபடுவது அவற்றின் வாழ்வாதாரத்தை அழிக்கிறது.

தொழிற்சாலைக் கழிவுகளாலும் பிற மாசுபாடுகளாலும் நீர்நிலைகளின் தரம் குறைவது அவை உண்ணும் பாசிகள் மற்றும் சிறிய உயிரினங்களின் உற்பத்தியைக் குறைக்கிறது.

திடீர் தட்பவெப்ப மாற்றங்கள் அவற்றின் வலசைப் போதலைப் பாதிக்கின்றன. சில சமயம் தாமதமாக வருவதும் முன்பே சென்று விடுவதும் நிகழ்கிறது.

பிளமிங்கோக்கள் அதிகமாக வந்து செல்லும் பகுதிகளைப் பறவைகள் சரணாலயமாக அறிவிப்பதன் மூலம் அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். இந்த அழகிய உயிரினங்களைப் பாதுகாக்க நீர்நிலைகளை மாசுபடுவதிலிருந்து காப்பதும் அதன் சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுவதும் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

பிளமிங்கோக்கள் வெறும் பறவைகள் அல்ல அவை இயற்கையின் கவிதைகள். அவற்றின் இளஞ்சிவப்பு நிறம் விசித்திரமான அலகு கூட்டமாக வாழும் அழகு மற்றும் ஒரு காலில் நின்று ஓய்வெடுக்கும் விந்தை என ஒவ்வொன்றும் இயற்கையின் மகத்துவத்தைச் சொல்கின்றன. மனிதர்களாகிய நாம் இந்த உயிரினங்கள் தங்கள் சுதந்திரமான வாழ்வைத் தொடர வழி செய்வதுடன் இந்தப் பூநாரைக் கூட்டங்களின் அழகு நம் தலைமுறைகள் பல கடந்தும் நிலைத்திருக்க இந்தச் சுற்றுச்சூழலைக் காப்பது எமது கடமையாகும்.




# த.வெ.க. தலைமையில்தான் கூட்டணி: முதல்வர் வேட்பாளராக விஜய் அறிவிப்பு

## சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

தமிழகத்தில் த.வெ.க. தலைமையில்தான் கூட்டணி அமைக்கப்படும். விஜய்தான் முதல்வர் வேட்பாளர் என்று கட்சியின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

த.வெ.க. சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் நேற்று நடைபெற்றது.

த.வெ.க. சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் ஆனந்த், இணைப் பொதுச் செயலாளர் சிடிஆர்.நிர்மல் குமார், தேர்தல் பிரசார மேலாண்மைப் பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, கொள்கைப் பரப்பு பொதுச் செயலாளர் கே.ஜி.அருண் ராஜ் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் என 1,000 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கரூரில் நடந்த கூட்டத்தில் பாதுகாப்புக் குறைபாடு உள்ளிட்ட காரணங்களால் 41 பேர் உயிரிழந்தனர். அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல். தமிழகத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் என்ற குழப்பமான நடைமுறையைக் கைவிட்டு, ஏற்கெனவே இருக்கும் பழைய நடைமுறையைத் தேர்தல் ஆணையம் பின்பற்ற வேண்டும்.

த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்கும் கூட்டங்களுக்கு வேண்டுமென்றே பாதுகாப்பு அளிக்காதது கண்டிக்கத்தக்கது. விஜய்க்கும், அவரைக் காணவரும் பொதுமக்களுக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டும். தமிழக தொழில் துறை முதலீடுகள், அவற்றால் உருவான வேலைவாய்ப்புகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

விஜய் தலைமையில் 2026 சட்டப் பேரவைத் தேர்தலை சந்திப்பது. த.வெ.க. தலைமையிலான தேர்தல் கூட்டணி தொடர்பான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் முழு அதிகாரத்தை விஜய்க்கு வழங்குவது. கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள விஜய்தான் முதல்வர் வேட்பாளர் என்பன உள்ளிட்ட 12 தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# ஹரியானாவில் 25 லட்சம் போலி வாக்காளர்: மோடி, அமித் ஷா மீது ராகுல் குற்றச்சாட்டு

ஹரியானாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 25 லட்சம் வாக்குகளை திருடி பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்ததாக ஆதாரங்களை வெளியிட்டு ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

குறிப்பாக, பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோருடன் சேர்ந்து, தேர்தல் ஆணையம் சதி செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

பிஹார் மாநில முதல்கட்ட தேர்தல் இன்று நடைபெறும் நிலையில், டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி செய்தியாளர்களிடம் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

"கடந்த ஆண்டு நடைபெற்ற ஹரியானா தேர்தலின்போது, அனைத்து கருத்துக் கணிப்புகளுமே காங்கிரஸ்தான் வெற்றி பெறும் என்று தெரிவித்தன. ஆனால், தேர்தல் முடிவுகள் வேறு மாதிரியாக அமைந்தன. வாக்குத்




திருட்டின் மூலம் பா.ஜ.கவுக்கு சாதகமாக தேர்தல் முடிவுகள் மாற்றியமைக்கப்பட்டன.

இதற்கான 100 சதவீத ஆதாரங்களை 'எச்-பைல்ஸ்' ஆக காங்கிரஸ் தொகுத்துள்ளது. அதில், ஒவ்வொரு வாக்கும் எவ்வாறு திருடப்பட்டுள்ளது என்று சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஹரியானாவைப் போலவே மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிர மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களிலும் வாக்குத் திருட்டுகள் நடைபெற்றுள்ளன. இதனால் நாட்டின் ஜனநாயக முறை சிதைக்கப்பட்டுள்ளதுடன், 'ஜென் ஸீ' இளைய சமுதாயத்தினரின் எதிர்காலமும் அழிக்கப்பட்டுள்ளது. இதை இளைய தலைமுறை புரிந்து கொண்டு, விழிப்புணர்வுடன் செயல்படுவது அவசியம்.

ஹரியானா தேர்தலில் ஒரு நபர், ஒரே புகைப்பட அடையாள அட்டையைக் கொண்டு 2 வாக்குச் சாவடிகள் மூலம் 223 வாக்குகளை செலுத்தியுள்ளார். ஆனால், அதற்கான சிசிடிவி ஆதாரங்களை தேர்தல் ஆணையம் அழித்துவிட்டது.

ஹரியானா வாக்காளர் பட்டியலில் 1.24 லட்சம் வாக்காளர்களின் போட்டோ போலியானது. 25 லட்சம் வாக்குகள் திருடப்பட்டுள்ளன.

இந்திய தேர்தல் ஆணையம், பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் கூட்டு சேர்ந்து, நாட்டின் ஜனநாயக அடித்தளத்தை அழித்து விட்டது. " என்று தெரிவித்துள்ளார்.



# முதியோர் இல்லத்தில் தீ விபத்து 11 பேர் உடல் கருகி உயிரிழப்பு

தென்கிழக்கு ஐரோப்பிய நாடான போஸ்னியா ஹெர்சகோவினாவில் உள்ள முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில், 11 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 30 பேர் படுகாயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

போஸ்னியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள துஸ்லா நகரத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தின் ஏழாவது தளத்தில் இந்த தீ விபத்து ஏற்பட்டது.

இதனால், இங்கு தங்கியிருந்த வயதானவர்களும், உடல்நலம் பாதித்தவர்களும் தாங்களாகவே வெளியேற முடியவில்லை.

அருகிலிருந்தவர்கள் அளித்த தகவலின்படி, தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

அதற்குள் தீ வேகமாகப் பரவியதால், உடல் கருகி 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புப்பணியில் ஈடுபட்டவர்கள் உட்பட 30 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் உடனடியாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், மின்கசிவு காரணமாகக் இந்த தீ விபத்து நடந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

உறுதியான காரணம் தெரியாத நிலையில் மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸ் முன்னெடுத்துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.









# அமெரிக்க பொருள்களுக்கான 24 சதவீத வரியை ஒரு வருடத்துக்கு நிறுத்துவதாக சீனா அறிவிப்பு

அமெரிக்க பொருள்களுக்கான 24 சதவீத வரியை ஒரு வருடத்துக்கு தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக சீனா அறிவித்துள்ளது.

ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு கூட்டமைப்பின் போது, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கை சந்தித்து கலந்துரையாடி இருந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது, அமெரிக்காவுக்கு அரிய வகை கனிமங்கள் ஏற்றுமதிக்கான தடைக்கு ஓராண்டு விலக்கு, அமெரிக்க விவசாய பொருள்கள் கொள்முதல் உள்ளிட்டவை குறித்து சீனா இணக்கம் வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பிரதிபலனாக சீன பொருள்கள் மீது அமெரிக்கா விதித்த வரியில், 10 சதவீதத்தை ட்ரம்ப் குறைத்திருந்தார்.

இதனையடுத்தே, தற்போது அமெரிக்க பொருள்களுக்கான 24 சதவீத வரியை ஒரு வருடத்துக்கு தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக சீனா அறிவித்துள்ளது.

அத்துடன், அமெரிக்க பொருள்கள் மீது ஏற்கனவே விதிக்கப்பட்டு வந்த 10 சதவீத வரி தொடரும் என்றும் சீனா அறிவித்துள்ளது.

# இது வாரிசு அரசியல் அல்ல நாட்டுக்கான எங்கள் தர்மம்!

## பிஹாரில் பிரியங்கா காந்தி தெரிவிப்பு



காங்கிரஸ் வாரிசு அரசியலை பின்பற்றுவதாகக் குற்றம் சாட்டுபவர்களால், எங்கள் முன்னோர்கள் செய்த தியாகங்களை ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது என பிரியங்கா காந்தி எம்.பி தெரிவித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சம்பாரண் மாவட்டத்தின் வால்மிக நகரில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரியங்கா காந்தி,

“நாங்கள் உங்களுக்குச் சேவை செய்ய விரும்புகிறோம். நாட்டின் செல்வம் உங்களுக்குச் சொந்தமானது என்பதை நாங்கள் புரிந்து வைத்துள்ளோம். எங்கள் முன்னோர்கள் சுதந்திரத்துக்காகப் போராடினர். உங்கள் முன்னோர்களில் பலரும் சுதந்திரத்துக்காக உயிர்த் தியாகங்களை செய்துள்ளனர்.

இங்குள்ள மண் உங்கள் ரத்தத்திலும் எங்கள் ரத்தத்திலும் ஊறியுள்ளது. ஆனால், வாரிசு அரசியல் இருப்பதாக மேடைகளில் கதறுபவர்களால், எங்கள் முன்னோர்கள் புரிந்த தியாகங்களை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. இது வாரிசு அரசியல் அல்ல. மாறாக, நாட்டுக்கான எங்கள் தர்மம்.

காலை முதல் மாலை வரை பா.ஜ.க. தலைவர்கள் நேருவை அவமதிப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். நாட்டை பாதிக்கும் அனைத்து தீமைகளுக்கும் அவரையே குற்றம் சாட்டுகிறார்கள். அதேநேரத்தில், நியூயோர்க் நகரின் புதிய மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர், நேருவை புகழ்ந்து பேசி உள்ளார். ஆனால், நேருவின் சொந்த நாட்டில் அவர் மீது தினமும் அவமானங்கள் குவிக்கப்படுவதைக் காண்கிறோம்.” என்று தெரிவித்தார்.

கனடா முரசு
வியாழக்கிழமை | 06/11/2025

## சொக்லேட்டில் ஊசி; கனடாவில் சர்ச்சை

கனடாவில் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்ட சொக்லேட்டில் ஊசிகள் காணப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டிஷ், கொலம்பியா மாகாணத்தின் மேலும் 02




# கனடா விசா விண்ணப்பதாரர்களுக்கான மருத்துவ பரிசோதனை விதிகள் புதுப்பிப்பு

கனடா அரசாங்கம், தற்காலிக குடியிருப்புக்கான மருத்துவ பரிசோதனை விதிமுறைகளைப் புதுப்பித்துள்ளது.

2025 நவம்பர் 3 ஆம் திகதி முதல், கனடா தற்காலிக குடியிருப்புக்கான விண்ணப்பதாரர்கள் எந்த நாடுகளில் வாழ்ந்திருக்கிறார்கள் அல்லது பயணித்திருக்கிறார்கள் என்பதனை அடிப்படையாகக் கொண்டு, மருத்துவ பரிசோதனை (IME) அவசியம் என புதிய பட்டியலை வெளியிட்டுள்ளது. 6 மாதங்களுக்கு மேல் கனடாவில் தங்க விரும்பும் அனைவரும் IME செய்ய வேண்டும்.

03






# கனடாவின் டொராண்டோவில் பலத்த காற்று வீசும் வாய்ப்பு

டொராண்டோ நகரில் இரவு நேரங்களில் பலத்த காற்று வீசும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனடா சுற்றுச்சூழல் திணைக்களம் இந்த சிறப்பு வானிலை அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அந்த அறிவிப்பின் படி, வடமேற்குத் திசையிலிருந்து மணிக்கு 70 முதல் 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பலத்த காற்று காரணமாக மரக்கிளைகள் முறிவு மற்றும் மின் விநியோக பாதிப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.



# வெளிநாட்டு உதவியை குறைக்கின்றது கனடா

பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான கனடா அரசு, நாட்டின் வெளிநாட்டு உதவி நிதியை கொரோனா தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்கு குறைக்கும் திட்டத்தை தனது 2025 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளது.

இது, தேர்தல் பிரசாரத்தின் போது "வெளிநாட்டு உதவி குறைக்கப்படாது" எனக் கூறிய வாக்குறுதியை மீறுவதாக தொண்டு நிறுவனங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

வரவு செலவுத் திட்டத்தில், அடுத்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 2.7 பில்லியன் கனடிய டொலர் அளவிலான குறைப்புகள் செய்யப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது உலக சுகாதார திட்டங்கள் மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மையங்களுக்கு வழங்கப்படும் நிதியையும் பாதிக்கவுள்ளது. அரசு இவ்வாண்டுக்கான சரியான வெளிநாட்டு உதவி மதிப்பீட்டை வெளியிடவில்லை.

முக்கிய தேவையுள்ள நாடுகளுக்கு ஆதரவை மையப்படுத்தி, புதுமையான கருவிகளை பயன்படுத்துவது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில சர்வதேச நிதி நிறுவனங்களுக்கான நிதியும் குறைக்கப்படவுள்ளது. கனடா கடந்த நிதியாண்டில் (மார்ச் 2024 முடிய) 6 பில்லியன் டொலர் வெளிநாட்டு உதவிக்காகவும், 2.6 பில்லியன் டொலர் சர்வதேச நிதி உதவிக்காகவும் செலவிட்டது.

மொத்தம் 12.3 பில்லியன் டொலர் வெளிநாட்டு உதவி தொடர்பான செலவுகளாக பதிவாகியுள்ளது. கோவிட் தொற்றுநோய்க்காலத்தில் கனடா வெளிநாட்டு உதவியை பெரிதும் அதிகரித்தது.

ஆனால் தற்போது பல அபிவிருத்தி நாடுகள் கடன் நெருக்கடி மற்றும் கால நிலை மாற்றத்தால் உருவான இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

கனடிய அரசாங்கத்தின் உதவி குறைப்பு திட்டத்திற்கு தொண்டு நிறுவனங்கள் கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளன.



## சொக்லேட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு நகரங்களில் உள்ள பெற்றோர் தங்களது குழந்தைகளுக்கு வாங்கி கொடுத்த சொக்லேட்டில் தையல் ஊசிகள் இருந்தன என பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கம்லூப்ஸ் மற்றும் ராஸ்லேண்ட் நகரங்களில் சமீபத்தில் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், ஆறு நகரங்களில் இது போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் ஒரு சிறிய கிட்கேட் சொக்லேட்டில் ஒரு ஊசி குத்தியிருப்பது போன்ற புகைப்படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

இந்த சொக்லேட்டில் தவறுதலாக தையல் பொருள்களுடன் கலந்து போயிருக்கலாம் என்றும், அதில் நூல் இணைந்திருந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# ஜீப் வாகனங்கள் குறித்து கனடாவில் எச்சரிக்கை

கனடாவில் ஜீப் வாகனங்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

உலகம் முழுவதிலும் பேட்டரி தீ அபாயம் காரணமாக 375,000 இற்கும் மேற்பட்ட ஜீ பிளக்-இன் ஹைபிரிட் வாகனங்கள் திரும்பப்பெறப்படுகின்றன.

இதில் கனடாவில் மட்டும் 20,753 வாகனங்கள் உள்ளன என கனடிய போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது.

இந்த திரும்பப்பெறல் 2022 முதல் 2025 வரை உற்பத்தி செய்யப்பட்ட ஜீப் கிரான்ட் செரோக்கி ஹைபிரிட் மாடல்களையும், 2021 முதல் 2025 வரை தயாரிக்கப்பட்ட ஜீப் வெரென்லர் ஹைபிரிட் மொடல்களையும் பாதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சில வாகனங்களில் உயர் மின்ன முத்த பேட்டரிக்குள் கோளாறு ஏற்பட்டு, வாகனம் நிறுத்தப்பட்ட நிலையிலும் தீ பற்றும் அபாயம் உள்ளது என கனடிய போக்குவரத்துத்துறை தனது எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த வாகனங்களை மின்சாரம் நிரப்ப வேண்டாம், மேலும் வீட்டுக்கு வெளியே, மற்ற வாகனங்கள் மற்றும் கட்டடங்களிலிருந்து தூரத்தில் நிறுத்தி வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

பிரச்சினைக்கு தீர்வு காணும் பழுது பார்த்தல்கள் இன்னும் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் தரவுகளை ஆய்வு செய்தபோது 19 தீ விபத்துகள் கண்டறியப்பட்டதாக நிறுவனத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேட்டரி மின்சாரம் முழுமையாக காலியாக இருந்தால் தீ அபாயம் குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கனடா விசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக, பெற்றோர் மற்றும் பாட்டி-தாத்தா super visa விண்ணப்பதாரர்களுக்கு இது கட்டாயம்.

IME தேவைப்படும் நாடுகள் : அர்ஜென்டினா, கொலம்பியா, உருகுவே, வெனிசுவேலா

IME தேவைப்படாத நாடுகள் : அர்மீனியா, போஸ்னியா & ஹெர்ஸிகோவினா, ஈராக், லாட்வியா, லிதுவேனியா, தைவான்

இந்த மாற்றங்கள், கனடாவின் பொதுச் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய மாணவர்கள் மற்றும் வேலைவாய்ப்பு விண்ணப்பதாரர்களுக்கு IME தேவையானது ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

மேலும், IME-யை மீண்டும் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் விலக்கு பெற, விண்ணப்பதாரர்கள் கடந்த 5 ஆண்டுகளில் IME செய்திருக்க வேண்டும் மற்றும் அதில் "low risk" என மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இந்த தற்காலிக பொதுக் கொள்கை 2029 ஒக்டோபர் 5 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

Express Entry வழியாக நிரந்தர குடியிருப்புக்கு விண்ணப்பிக்க விரும்பும் வெளிநாட்டினர், IME சான்றிதழ்களை முன்பே சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.